**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.**

**வழக்கு எண். CC 05/2019**

**வழக்கு சாட்சிPW1**

| பெயர் | அமி்ரதலிங்கம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கிருஷ்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 39 |

தேதி11.09.2025

**எதிரி ஆஜர்**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் நான் எண்.25, உடையார் தோட்டம் மூன்றாவது தெரு, மாதவரம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பி.வி.சி கதவு தனியாக செய்கிறேன். விபத்துப்பகுதி அதிக வாகனங்கள் செல்லக்கூடிய பகுதி என்றால் ஆமாம். எனது அண்ணன் எங்கு வசித்து வந்தார் என்றால் உடையார் தோட்டம். நான் எங்கிருந்து எங்கு சென்றேன் என்றால் கண்ணபிரான் கோயில் ஜாங்கிரி கடையில் இருந்து பொன்னியம்மன்மேடு சென்றேன். சாலையை கடப்பதற்கு இடையே சென்டர் மீடியேட் கட்டை உள்ளது என்றால் எனது அண்ணன் இறந்தபின்புதான் கட்டை எழுப்பினார்கள். சாலையை கடப்பதற்கு சிக்னல் கிடையாது என்றால் ஆமாம். சாலையை கடப்பவர்கள் தான் இரண்டு புறமும் பார்த்து கடக்க வேண்டும் என்றால் ஆமாம். நான் நின்ற NTR குடோனானது விபத்து நடந்த இடத்திலிருந்து 200 மீட்டர் தொலைவு இருக்குமென்றால் ஆமாம். அந்த சாலையில் அடுத்தடுத்து வாகனங்கள் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும் என்றால் ஆமாம். விபத்தை எதிர்பார்த்து நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் ஆமாம். நான் சத்தம் கேட்ட பின்பு தான் நான் சம்பவ இடத்தை பார்த்தேன் என்றால் ஆமாம். நான் நின்ற இடத்திலிருந்து யார் தவறால் விபத்து ஏற்பட்டது என்பதனை கூற முடியாது என்றால் ஆமாம். நான் மோதிய வண்டியை சரியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். நான் ஓட்டுநரையும் சரியாக பார்க்கமுடியாது என்றால் ஆமாம். விபத்து நடந்த பின்புதான்

விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் என்பது எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் புகார் எங்கு வைத்து அளித்தேன் என்றால் ஸ்டேன்லி அரசு மருத்துவமனையில் வைத்து புகார் அளித்தேன். புகாரினை யார் எழுதியது என்றால் போலிசார். புகாரில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். இறந்த எனது அண்ணனுக்கு இழப்பீட்டு தொகை பெற்றுவிட்டோமா என்றால் பெற்றுவிட்டோம். இழப்பீடு தொகை பெற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>